<u>ம.சா.1 சுகன்யா</u> **E.A.No.**331/2008 **in EP,No.**282/2006 10.01.2020

சாட்சி அழைக்கப்பட்டு ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்

<u>1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

எனது கணவர் பெயர் சுரேஷ்சந்திரமௌலி. என் கணவரின் ஊர் காங்கேயம். எங்களுக்கு 1998 ம் ஆண்டு திருமணமானது. திருமணத்திற்குப் பிறகு என் கணவருடன் அவருடைய வீட்டில்தான் சேர்ந்து வாழ்கிறேன். பின்னர் என் கணவருக்கும், எனக்கும் விவாகரத்தானது. மீண்டும் நாங்கள் சேர்ந்து வாழ்ந்து வந்து, என் கணவர் 2014 ம் ஆண்டு காலமாகி விட்டார். காங்கேயத்தில் 6 மாதம்தான் வசித்தோம், பின்னர் கணபதி-பாளையத்தில் வசித்தோம். தற்போது நானும் என் தந்தையும்தான் நீதிமன்றத்திற்கு வந்தோம். நானும், என் தகப்பனாரும் நீதிமன்றத்திற்கு வெளியில் பேசிக் கொண்டுதான் இருந்தோம். என் தகப்பனார் இந்த மனுவில் 2 ம் எதிர்மனுதாரர். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.2 ஆவணத்தின் நகலை 2007 ம் ஆண்டு எடுத்தோம். அ.வ.எண்.678/96 என்ற வழக்கு கிரய ஒப்பந்தம் சம்பந்தமாக தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த வழக்கில் காட்டப்பட்டிருந்த சொத்தானது எங்களுடைய பூர்வீகச் சொத்துதான். அந்த வழக்கில் என் தகப்பனார் தாக்கல் செய்த பதிலுரை மற்றும் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையின் நகல்களை நாங்கள் வாங்கியிருக்கிறோம். அந்த தீர்ப்பை ரத்து செய்ய வேண்டுமென்று அந்த வழக்கிலேயே மனு தாக்கல் செய்தேன். அந்த மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன். அந்த மனுவின் எண்ணை என் வழக்கறிஞரிடம்தான் கேட்க வேண்டும். அந்த மனு நிலுவையில்தான் இருக்கிறது. நான் சொல்வது போல் அத்தீர்ப்புரையை ரத்து செய்வதற்காக நான் மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், அதுபோல் மனு எதுவும் நிலுவையில் இல்லை என்றாலும் சரியல்ல. நான் நீதிமன்றத்தை ஏமாற்ற வேண்டுமென்பதற்காகத்தான் அந்த வழக்கிலிருந்து பெறப்பட்ட பதிலுரை மற்றம் தீர்ப்புரை நகலை இம்மனுவில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அந்த நகல்களை தாக்கல் செய்தால் இம்மனுவிற்கு விரோதமாகவிடும் என்பதாலும் அவற்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தீர்ப்பாணை பெற்றவர் சுவாதீனம் பெறுவதற்காக மனுவை தாக்கல் செய்த பிறகு என் தகப்பனார் என்னை வைத்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. தீர்ப்பாணை பெற்றவர் தீர்ப்பாணையின் பலனை அடையவிடாமல் காலதாமதம் செய்வதற்காகவே என் மூலமாக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை -</u> இல்லை.